**<u>சாட்சியின் வாக்குமூலம்</u>**

**<u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>**

**அசல் வழக்கு எண் : 150/2014**

**DW1– திரு. பாலசுப்பிரமணியம் த/பெ. சந்திரசேகர்**

**22.04.2026**

<u>சாட்சி சத்திரப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ந்து செய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

**நேரம் 12.50 மணி**

தாவா சொத்து எங்குள்ளது என்றால் பிளாட் எண் 30, வெங்கடாஜலபதி நகர், வேப்பம்பட்டு, பெருமாள்பட்டு ஊராட்சிக்கு உட்பட்டது. நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.A., Sociology படித்துள்ளேன் அது Airforce ல் கொடுக்கும் டிகிரியாகும். எந்த வருடம் நான் Airforce ல் சேர்ந்தேன் என்றால் 1984 ல் சேர்ந்தேன். எந்த வயதில் பணியில் சேர்ந்தேன் என்றால் என்னுடைய 18 ஆம் வயதில் பணியில் சேர்ந்தேன். எந்த பள்ளியில் படித்தேன் என்றால் HVF ஆவடி கேந்திர வித்தியாலயாவில் படித்தேன். Airforce ல் என்ன பணியில் சேர்ந்தேன் என்றால் Air Traffic Controller ஆக பயிற்சி பெற்று Air Traffic Controller ஆக பணிபுரிந்தேன். அந்த காலகட்டத்தில் 12 ஆம் வகுப்பு படித்து முடித்திருந்தேனா என்றால் இல்லை. நான் பள்ளி படிப்பை படிக்கும்போது எங்கு குடியிருந்தேன் என்றால் HVF Quarters ல் குடியிருந்தோம். என் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் மொத்தம் 5 பேர். என்னுடைய மூத்த அண்ணன் ஞானசேகரன் எங்களுடன் குடியிருந்தது இல்லை. அவர் இறந்துவிட்டார். ஞானசேகரன் எங்கு படித்தார் என்றால் செவ்வாப்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் படித்தார். 2 ஆம் வாதி சிவராமன் எங்கு படித்தார் என்றால் HVF ஆவடி கேந்திர வித்தியாலயாவில் படித்தேன். அவர் படிக்கும்போது வீட்டிலிருந்து தான் பள்ளிக்கு செல்வோம் என்றால் சரிதான். என் தந்தை HVF ல் வேலை செய்ததால் தான் HVF Quarters ல் குடியிருந்தோம் என்றால் சரிதான். என்னுடைய சகோதரிகள் ரேணுகா, பிரேமாவதி எங்கு படித்தார்கள் என்றால் பட்டாபிராம் அரசு மேல்நிலைப்பள்ளியில் படித்தார்கள். என் தந்தை Group IV Pump Attender ஆக HVF ல் வேலை செய்தார். தாவா சொத்தை தவிர வேறுசொத்து உள்ளதா என்றால் உள்ளது. என் பாட்டியின் சொத்து உள்ளது.

அது பாகப்பிரிவினையில் கிடைத்தது. அந்த சொத்து பெருமாள்பட்டில் உள்ளது. தாவா சொத்தை என் தந்தை 1988 ல் வாங்கினார் என்றால் என் அம்மா வாங்கினார். என் அம்மா விவசாயம் செய்தார். என் அம்மா விவசாயம் செய்தார் என்பதற்கான ஆதாரம் உள்ளதா என்றால் ஆவணம் உள்ளது. அதில் வருவாய் வந்ததற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. விவசாயம் செய்த இடம் எங்குள்ளது என்றால் பெருமாள்பட்டு ஊராட்சியில் உள்ளது. மேற்படி இடம் என் தாயாருக்கு சொந்தமானது. அதற்கான ஆதாரம் உள்ளதா என்றால் உள்ளது. அதற்கான ஆதாரம் சமர்ப்பிக்கவில்லை என்றால் என் பாட்டி எழுதி கொடுத்த உயில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள 23 ஆவணங்களில் 10.11.1995 ல் செட்டில்மெண்ட் ஆவணமும் அது சம்பந்தப்பட்ட பட்டா, சொத்து வரி ரசீது ஆகியவற்றை மட்டும் தான் தாக்கல் செய்துள்ளோம் என்றால் இல்லை. என் பாட்டி என் தாயாருக்கு எழுதி வைத்த உயிலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தாயார் விவசாயம் செய்ததற்கான எந்த ஆதாரமும் இல்லாத பட்சத்தில் என் தந்தையின் வருமானத்தில் தான் சொத்து வாங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1988 ல் சொத்து வாங்கும்போது நான் ஊரில் இல்லை என்றால் சரிதான். நான் ஊருக்கு வந்துபோய் இருப்பேன். வருடத்திற்கு 2 மாதம் லீவு கிடைக்கும். 1984 ல் Airforce ல் ஒப்பந்தம் செய்துகொண்டு 20 வருடம் கழித்து தான் VRS வாங்கமுடியும் என்றால் சரிதான். 20 வருடம் பணி முடித்து தான் VRS வாங்கினேன் என்றால் சரிதான். 1984 ல் பணியில் சேர்ந்து 2004 ல் தான் VRS வாங்கிவிட்டு ஊருக்கு வந்தேன் என்றால் சரியல்ல. 1986 ஆம் வருடம் ஆவடியில் Airforce ல் Air Traffic Controller ஆக பணிபுரிந்தேன். 1984–1986 குவாலியரில் பணிபுரிந்தேன். 1986–88 ஆவடியில் பணிபுரிந்தேன். 1988–91 தாம்பரம் Airforce ல் பணிபுரிந்தேன். 1991–95 கவுகாத்தி, அசாமில் பணிபுரிந்தேன். 1995–99 தாம்பரத்தில் பணிபுரிந்தேன். 1999–2003 ஜம்மு காஷ்மீரில் பணிபுரிந்தேன். 2003 ஆம் வருடம் சென்னை அம்பத்தூரில் பயிற்சிக்காக வந்தேன். 1995–1999 ல் தாம்பரத்தில் பணிபுரிந்தபோது அங்கு Quarters ல் பணிபுரிந்தேன் என்றால் சரிதான். நான் 11 ஆம் வகுப்பு படிக்கும்போதே எனக்கு வேலை கிடைத்துவிட்டது என்றால் சரிதான். படித்தவுடன் வேலை கிடைத்தவுடன் எனக்கு பணியிடமாறுதல் அடிக்கடி நடக்கும் என்பதால் பெற்றோருடன் இருக்க வாய்ப்பில்லை என்றால் சென்னையில்

இருக்கும்போது பெற்றோர்கள் என்னுடன் வந்து தங்கியிருந்தார்கள். வெளி மாநிலத்தில் இருக்கும்போது பெற்றோர்களுடன் இருந்திருக்கிற வாய்ப்பில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை என் தந்தை வாங்கினார் என்றாலும் என் தாயாரின் விவசாயத்திலிருந்து வந்த வருமானத்தில் வாங்கப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. என் தந்தை Pump Attender ஆக பணிபுரிந்து தாவா சொத்தை வாங்கினார் என்றால் சரியல்ல. என் தந்தையின் வருமானம் மிக குறைவு. நாங்கள் 5 பேர். 5 பேரையும் படிக்க வைக்க செலவானது. என் தாயார் விவசாயம் செய்து வந்த வருமானம் குறைவு என்றால் 3 ஏக்கரில் விவசாயம் செய்தோம். என் தந்தை அவர் சம்பாதித்த வருமானத்திலிருந்து என் தாயார் பெயரில் சொத்து வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. என் தாயாரின் நலனுக்கும், பிள்ளைகளின் நலனுக்காகவும் என் தந்தை அவருடைய வருமானத்திலிருந்து தாவா சொத்தை வாங்கினார் என்றால் சரியல்ல. என் தந்தை 1988 ல் கிரையம் பெற்ற ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் தந்தை வாங்கவில்லை. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 10–11–1995 ல் என் பெயருக்கு என் தாயார் செட்டில்மெண்ட் செய்துள்ளார் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் யார் சாட்சி கையொப்பமிட்டுள்ளார் என்றால் ஆதிகேசவலு நாயுடு மற்றும் என் தந்தை சந்திரசேகர் கையொப்பமிட்டுள்ளார். என் தந்தைக்கு எழுத படிக்க தெரியும் என்றால் படிக்க தெரியும், கையொப்பம் மட்டும் இடுவார். என் தந்தை கையொபத்தை தெலுங்கில் போட்டுள்ளார். மேற்படி கையொப்பம் என் தந்தையின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. ஆதிகேசவலு நாயுடு தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. அவரிடமிருந்து தன் என் தாயார் சொத்தை வாங்கினார் என்றால் ஆதிகேசவலு நாயுடு மற்றும் கோவிந்தராஜு நாயுடு ஆகியோரிடமிருந்து 1988 ஆம் வருடம் வாங்கினார். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் மற்ற வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. என் தந்தை எந்த வருடம் இறந்தார் என்றால் 2003 ஆம் வருடம் இறந்தார். செட்டில்மெண்ட் ஆவணம் 1995 ல் என் பெயரில் எழுதிவைக்கப்பட்ட விவரம் என் கூட பிறந்தவர்களுக்கு தெரியாது என்றால் எல்லோருக்கும் தெரியும். நான் என் தாயாருடன் இல்லை என்றாலும் ஊருக்கு வரும் 2 மாதத்தில் என் தாயாரை கட்டாயப்படுத்தி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி

வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. எந்த வருடம் எனக்கு திருமணம் ஆனது என்றால் 1990 ஆம் வருடம் திருமணம் ஆனது. எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 மகன்கள். ஞானசேகருக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஞானசேகருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 1 மகன், 1 மகள். 2 ஆம் வாதி சிவராமனுக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் எனக்கு வருடம் ஞாபகமில்லை. அவருக்கு 1 மகன் உள்ளார். நான் வெளியூரில் இருக்கும்போது 2 ஆம் வாதியும் என் தங்கைகள் என் பெற்றோருடன் இருந்தார்கள் என்றால் சரியல்ல. 1 ஆம் வாதி எங்கு வேலை பார்த்தார் என்றால் Central Excise ல் பணிபுரிந்தார். அவருக்கும் அலுவலக குடியிருப்பு உள்ளது என்றால் சரிதான். 2 ஆம் வாதி எங்கு பணிபுரிந்தார் எனறால் CRPF ல் 5 வருடம் பணிபுரிந்து வேலையை விட்டுவிட்டு வந்துவிட்டார். அதன்பின்னர் பிஸ்னஸ் செய்து வந்தார். சென்னையில் தொழில் செய்து வருகிறார். அவர் சென்னையில் இருந்ததால் அவர் தான் என்னுடைய பெற்றோரை கவனித்துக்கொண்டார் என்றால் சரியல்ல. நான் 20 வருடம் வெளியூரிலிருந்து பணிபுரிந்து 2 மாதம் மட்டும் வட்டிற்கு வந்ததால் நான் என் பெற்றோருடன் நெருக்கமாக இல்லை என்றாலும் 2 ஆம் வாதி தான் என்பெற்றோருடன் நெருக்கமாக இருந்தார் என்றால் சரியல்ல. நான் சென்னையில் 8, 9 வருடம் இருந்தேன். உயில் மூலமாக வந்த சொத்தும், தாவா சொத்தும் வெவ்வேறு சொத்து என்றால் சரிதான். என் தந்தை இறந்த பிறகு 2004 ல் தான் சென்னை வந்தேன் என்றால் நான் 2003 ல் சென்னைக்கு வந்தேன். நான் வந்த பிறகு தான் என் தந்தை இறந்தார். 1995 ல் என் பெயரில் செட்டில்மெண்ட் எழுதிய பிறகு நான் அந்த சொத்தில் குடியிருந்தேன் என்றால் அந்த வீட்டில் தான் இருந்தேன். வாங்கும்போது 1988 ஆம் வருடம் காலிமனையாக இருந்தது. என் தந்தை தான் வீட்டை கட்டினார் என்றால் சரிதான். சொத்தை வாங்கி என் தந்தை தன்னுடைய வருமானத்திலிருந்து வீட்டை கட்டினார் என்றால் சரியல்ல. நான் வெளியூரில் பணியில் இருந்தபோது என் குடும்பத்தினர் என்னுடன் தான் வெளியூரி வசித்து வந்தார்கள் என்றால் சிலநேரம் இங்கு இருப்பார்கள் சிலநேரம் என்னுடன் அலுவலக குடியிருப்பில் இருப்பார்கள். என்னுடைய மகன்கள் எங்கு படித்தார்கள் என்றால் மூத்த மகன் கேந்திர வித்தியாலயாவில் படித்தார். இளைய மகன் ஜெயா மெட்ரிக்குலேஷன் பள்ளி திருநின்றவூரில் படித்தார். என்னுடைய மூத்த

Airforce ல பணிபுரிந்து வருகிறார். என் மனைவி பணி எதுவும் செய்யவில்லை.

**நேரம் 13.35 மணி**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.